உ
சிவமயம்

# செய்தி மடல்

அகில இலங்கை இந்து மாமன்றம்
ALL CEYLON HINDU CONGRESS

விரோதி வருடம்
தைத் திங்கள்
30ஆம் நாள்
12.02.2010

தலைமையகம் : இல. 91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு-02, இலங்கை
தொலைபேசி : 011 2434990 – தொலைநகல் : 011 2344720, மின்னஞ்சல்: hinducongress@gmail.com

## மார்ச் 13ம் திகதியன்றே இவ்வருட மகா சிவராத்திரி விரதம்

### இந்த மடலில்....

யாழ். சிறப்பு நிகழ்வுகள் - 16.01.2010 (பக்கம் 03)




நந்திக்கொடி ஏற்றப்படுகிறது     மங்கள விளக்கேற்றல்




பல்கலைக்கழக மாணவர்களுக்கு நிதியுதவி




வலுவிழந்தோருக்கான முச்சக்கரவண்டி அன்பளிப்பு

### மாமன்றம் மீண்டும் தெளிவுபடுத்துகிறது

இவ்வருட மகா சிவராத்திரி விரத தினம் இரு பஞ்சாங்கங்களிலும் வெவ்வேறாகக் காணப்படுவதால், இந்து மக்கள் பலர் குழப்பமடைந்த நிலையில் சிவராத்திரி விரதத்தை எப்போது அனுஷ்டிக்கவேண்டும் என அகில இலங்கை இந்து மாமன்றத்திடம் கேட்டு வருகிறார்கள். இதற்குரிய விளக்கத்தை இந்து மாமன்றம் ஏற்கனவே அறிவித்திருந்தது. மீண்டும், இது விடயம் குறித்து இந்து மாமன்றம் தெளிவுபடுத்த விரும்புகிறது.

இந்த குழப்பநிலை தொடர்பாக இந்து மாமன்றம் சில மாதங்களுக்கு முன்னர் சமய அறிஞர்கள் பலருடனும், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்துடனும் தொடர்புகொண்டு ஆலோசனைகளை மேற்கொண்டது. இது தொடர்பாக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் இருதடவைகள் நடத்திய கலந்துரையாடல்களிலும் மாமன்றம் பங்குகொண்டது. இதன்போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படியும், இந்தியாவிலுள்ள பிரபல்யம்பெற்ற சிவாலயங்களிலும், இலங்கையில் பாடல்பெற்ற தலங்களான திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் போன்ற ஆலயங்களிலும் மகாசிவராத்திரி பூசை வழிபாடுகள் நடத்தப்படும் தினத்தை கவனத்தில் கொண்டும் மார்ச் 13ம் திகதியன்றே மகாசிவராத்திரி விரதத்தை அனுஷ்டிப்பது பொருத்தமானது என்று இந்து மாமன்றம் வலியுறுத்தியிருந்தது. அத்துடன் 2010ம் ஆண்டுக்குரிய அரச விடுமுறை தினங்களை கணிப்பது தொடர்பாக பதிவாளர் திணைக்களத்தால் 2009 மே மாதம் நடத்தப்பட்ட ஆலோசனைக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்த இந்து மாமன்றப் பிரதிநிதியாலும், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளராலும் இதே கருத்து முன்வைக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், அதுவே அரச விடுமுறை தினமாகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே, மார்ச் 13ம் திகதி சனிக்கிழமையன்றே மகாசிவராத்திரி விரதம் அனுஷ்டிக்கப்படவேண்டும் என்பதை அகில இலங்கை இந்து மாமன்றம் இந்து மக்கள் அனைவருக்கும் மீண்டும் அறியத்தருகின்றது.

யாழ். சிறப்பு நிகழ்வுகளின்போது நல்லை ஆதீன முதல்வர் நந்திக்கொடி ஏற்றிவைப்பதையும், லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலய அறங்காவலர் சபையைச் சேர்ந்த திரு. அ. தேவசகாயம் தம்பதியினர் மங்கள விளங்கேற்றி வைப்பதையும் முதலாவது படத்திலும், திரு. அ. தேவசகாயம் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒருவருக்கு நிதியுதவி வழங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம். வலுவிழந் தோருக்கான முச்சக்கரவண்டி அன்பளிப்பாக வழங்கும் நிகழ்வைக் குறிப்பிடும் மூன்றாவது படத்தில் முச்சக்கரவண்டியை பெறுபவருடன் மனிதநேயர் வி. கயிலாசபிள்ளை, திரு. கந்தையா நீலகண்டன், விடைக்கொடிச்செல்வர் சின்னத்துரை தனபாலா, செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் ஆகியோரைக் காணலாம்.

## வாழ்த்து

மலைமகள் மணாள னான்தன் மலரடி நீடுவாழ்க
அலைகடல் விடமதுண்ட அண்ணல்தம் அடியார் வாழ்க
கலைபல கற்றுத் தேர்ந்து காசினிதன்னி னுள்ளோர்
இலமெனு மின்னல் நீங்கி இன்புற்று நீடுவாழ்க!

**விரோதி வருடம் தைத் திங்கள் 30ம் நாள் (12.02.2010)**

# மாமன்றத்தின் குரல்

உங்கள் அனைவருக்கும் எங்கள் அன்பு வணக்கம். மாமன்றத்தின் மற்றுமொரு செய்திமடல் ஊடாக உங்களை மீண்டும் சந்திப்பதில் மனநிறைவு கொள்கின்றோம்.

தைத்திங்களும் பிறந்துவிட்டது. சூரிய பகவானுக்குப் பொங்கிப் படைத்து தைத்திங்களை வரவேற்றுள்ளோம். ‘‘தை பிறந்தால் வழி பிறக்கும்’’ என்ற நம்பிக்கையுடன் எங்கள் வாழ்க்கையை நடத்திச் செல்கின்றோம். எங்கள் அனைவரினதும் எதிர்பார்ப்பாக தமிழ்மக்களது வாழ்வில் மகிழ்ச்சியும் நிம்மதியும் சேர்ந்தமைந்ததொரு ஒளிமயமான எதிர்காலம் விரைவில் உதயமாகும் என்பதில் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளோம்.

இன்று நாட்டின் எந்தவொரு பகுதிக்கும் கட்டுப்பாடின்றி சென்று வரக் கூடியதான நிலை ஏற்பட்டிருப்பதும் மகிழ்ச்சிக்குரியது. வடபகுதிக்கான போக்குவரத்துப் பாதையும் எந்நேரமும் திறக்கப்பட்டிருப்பதும் நல்லதொரு எதிர்காலத்தை தோற்றுவித்துள்ளது.

நாட்டில் நிலவும் சுதந்திரமான நிலைமை, மாமன்றத்தின் சமய, சமூக நலப் பணிகளை மேலும் முன்னெடுத்துச் செல்வதற்கு மட்டுமல்ல, நாட்டின் பல பகுதிகளுக்கும் அதனை விஸ்தரிப்பதற்கும் துணை நிற்பதை சிறப்பாகக் குறிப்பிடவேண்டும். அந்த வகையில், மலர்ந்துள்ள இந்த தைமாதத்திலிருந்து வடபகுதிக்கான மாமன்றத்தின் சேவைகளை பெருமளவு வழங்குவதற்கு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

நாட்டின் அசாதாரண சூழ்நிலைகள் முற்றாகவே நீங்கி, அனைத்து மக்களும் தங்களது சொந்த இடங்களில் நிம்மதியுடன் வாழும் நல்லதொரு நிலைமை விரைவில் அமையவேண்டும் என்பதற்காக, அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானைப் பிரார்த்திப்போமாக!

**கந்தையா நீலகண்டன்**
*பொதுச் செயலாளர், அகில இலங்கை இந்து மாமன்றம்.*

## இரத்மலானை மாணவர் விடுதி

இந்து மாமன்றத்தின் பராமரிப்பிலுள்ள இவ்விடுதியில் வதியும் பிள்ளைகளுக்கு நீங்கள் அனைவரும் தாராளமாக உதவலாம். பிள்ளைகளுக்கு தினந்தோறும் போசனம் வழங்குவதற்காக உங்கள் பங்களிப்பையும் எதிர்பார்க்கிறோம். விடுதி மாணவர்களது தொகை இப்போது அதிகரித்துள்ளதால் போசனம் வழங்குவதற்கான செலவினங்களும் அதிகரித்துள்ளது. எனவே, இதற்கான நன்கொடைத் தொகையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதை தயவுசெய்து கவனத்திற் கொள்ளுங்கள்.

**மாற்றப்பட்ட நன்கொடை விபரம் பின்வருமாறு அமைகிறது:**

| | | | |
|---|---|---|---|
| காலைப் போசனம் | : | 20000/– | ரூபா |
| மதிய போசனம் | : | 30000/– | ரூபா |
| | | 40000/– | ரூபா (விசேடம்) |
| இரவுப் போசனம் | : | 30000/– | ரூபா |
| | | 40000/– | ரூபா (விசேடம்) |
| மாலை தேநீர்/ சிற்றுண்டி | : | 20000/– | ரூபா |

போசனத்திற்கான நன்கொடை அல்லது வேறு வகையில் உதவ விரும்புபவர்கள் மாணவர் விடுதி மேற்பார்வையாளருடன் தொடர்பு கொள்ளலாம். (தொலைபேசி இல : 011 – 2625588) அல்லது அகில இலங்கை இந்து மாமன்றத் தலைமையகத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

**தொலைபேசி இல : 011-2434990, தொலைநகல் இல : 011-2344720**

# யாழ்ப்பாணத்தில் பல இந்து ஆலயங்கள் பாதிக்கப்படும் அபாயம்

யாழ் நகரிலிருந்து காங்கேசன்துறை செல்லும் பிரதான வீதியை அகலப்படுத்தி விஸ்தரிக்கும் திட்டமொன்றை அரசாங்கம் மேற்கொண்டிருப்பதாகவும், இதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்படும் நிலையிலிருப்பதாகவும் தெரியவருகிறது. இந்த விஸ்தரிப்புத் திட்டத்தின்படி, இந்த பிரதான வீதியிலுள்ள 27 இந்து ஆலயங்களும், பழம்பெரும் கலாசார நினைவுச் சின்னங்களும் பாதிக்கப்படும் அல்லது அழிக்கப்படும் நிலை ஏற்பட்டிருப்பதை அறிந்து யாழ். இந்து மக்களும், இந்து நிறுவனங்களும் அதிர்ச்சியடைந்த நிலையில், இது விடயத்தை அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உடனடி கவனத்திற்கு கொண்டு வந்தார்கள்.

இது தொடர்பாக இந்து மாமன்றத் தலைவரும் திருக்கேதீஸ்வர ஆலய அறங்காவலர் சபைத் தலைவருமான வி. கயிலாசபிள்ளை, பொதுச் செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன், திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச் சபையின் பொருளாளர் திருமதி. அ. கயிலாசபிள்ளை ஆகியோர் வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறியை இம்மாதம் (பெப்ரவரி) 5ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை கொழும்பிலுள்ள அவரது அலுவலகத்தில் அவசரமாக சந்தித்து மகஜர் ஒன்றை கையளித்தார்கள்.

மேற்படி வீதி விஸ்தரிப்பு திட்டம் தொடர்பாக யாழ்ப்பாணத்திலுள்ள நிபுணர்களிடம் பெறுமதியான மாற்றுத் திட்டங்கள் இருப்பதை அறிவதாகவும், அத்தகைய மாற்றுத் திட்டங்களைப் பாவித்து, உத்தேச வீதி விஸ்தரிப்பு திட்டத்தை மாற்றியமைத்து யாழ். மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும்படியும் அந்த மகஜர் ஊடாக வேண்டுகோள் விடுத்துள்ளதுடன், யாழ். பல்கலைக்கழக சமூகத்துடனும், யாழ்ப்பாணத்திலுள்ள ஏனைய பிரமுகர்களுடன் கலந்தாலோசித்து இது விடயத்தில் நல்ல முடிவை எடுக்கும்படியும் கேட்டுக்கொண்டார்கள். இது விடயம் தொடர்பாக மறுநாள் (6ம் திகதி சனிக்கிழமை) யாழ்ப்பாணத்திலுள்ள தனது அலுவலகத்தில் யாழ்ப்பாண பல்கலைக்கழக சமூகத்தையும் சந்தித்து மேலும் விபரங்களைத் திரட்டி தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி தெரிவித்திருந்தார்.

மாமன்றப் பிரதிநிதிகள் குழுவினர் ஆளுநரை சந்தித்தபோது திருக்கேதீஸ்வர ஆலய புனருத்தாரண வேலைகளை துரிதப்படுத்துமாறும், இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் சிற்ப வேலைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கும்படியும், யாழ். பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடம் அமைப்பதற்கும், மாணவர்களுக்கான போதிய விடுதி வசதிகளை அமைத்துக்கொடுப்பதற்கு இந்திய அரசாங்கத்தின் உதவியைப்பெற்று தேவையான ஏற்பாடுகளைச் செய்யும்படியும், இடம்பெயர்ந்த யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு மேலும் உதவிகள் வழங்கப்படவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இது விடயம் தொடர்பாக இம்மாதம் (பெப்ரவரி) 6ம் திகதி சனிக்கிழமையன்று வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி யாழ்ப்பாணத்திலுள்ள தனது அலுவலகத்தில் அவசரக் கூட்டமொன்றை நடத்தியிருந்தார். இதில் இந்து மாமன்றத்தின் சார்பாக உப தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன், மாமன்ற யாழ். பிராந்திய பணிமனை நிர்வாக அலுவலர் திரு.வி. ஜெயசிங்கம், யாழ். பல்கலைக்கழகத்தின் சார்பாக உபவேந்தர் பேராசிரியர் நா. சண்முகலிங்கன், விரிவுரையாளர் திரு. பொ. அகிலன் ஆகியோர் கலந்துகொண்டு வீதி விஸ்தரிப்பு விடயத்தில் ஏற்படும் பாதிப்புகளை எடுத்துரைத்தார்கள்.

இதுவிடயம் தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபையினரையும், வேலை ஒப்பந்தக்காரரையும் அழைத்து மேலும் ஆராய்ந்து தீர்மானம் எடுக்கப்படும் என்று ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

# மாமன்றத்தின் யாழ். பிராந்திய பணிமனையில் நூலகம் திறப்பு விழாவும் ஏனைய சிறப்பு நிகழ்வுகளும்

கடந்த ஐம்பத்தைந்து ஆண்டுகளாக சமயப் பணிகளுடன், சமூக நல கல்விப் பணிகளையும் ஆற்றிவரும் நிறுவனமாகத் திகழும் அகில இலங்கை இந்து மாமன்றம் அண்மைக் காலத்தில் வடபகுதியிலும் தனது சேவைகளை விஸ்தரித்துள்ளது. இதற்கு முன்னோடியாக, யாழ்ப்பாணத்தில் நல்லூர், கோவில் வீதியில் அன்பளிப்பாகக் கிடைத்த காணியில் சில வருடங்களுக்கு முன் மாமன்றத்தின் பிராந்திய பணிமனையொன்று அமைக்கப்பட்டது. நிலமாடி மற்றும் இரண்டு மேல் மாடிகளைக் கொண்ட இந்தப் பணிமனை கடந்த வருடம் (2009) ஜனவரி 9ம் திகதியன்று உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டதுடன், சைவ ஆராய்ச்சி நிலையமும், சைவப் பிரசாரகர் பயிற்சி நிலையமும் இங்கு நிறுவப்பட்டன.

அண்மையில் வடபகுதிக்கான போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்ட நிலையில் கொழும்பிலிருந்து யாழ் செல்லும் ஏ9 பிரதான நெடுஞ்சாலை ஊடான போக்குவரத்தும் வழமை நிலைக்கு வந்துள்ளதால், மாமன்றத்தின் வடபகுதிக்கான பணிகளை மேலும் சிறப்பாக முன்னெடுத்துச் செல்வதற்கு வசதிகள் கிடைத்துள்ளன. லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலய அறங்காவலர் சபையினரும் நீண்டகாலமாகவே வழங்கிவரும் ஆதரவும், உதவிகளினதும் ஊடான அனுசரணையும் மாமன்றத்தின் பணிகளை வெற்றிகரமாகச் செயற்படுத்துவதற்கு துணை நிற்கின்றன என்பதைச் சிறப்பாகச் சொல்ல வேண்டும்.

இந்த நிலையில், இங்குள்ள சைவ ஆராய்ச்சி நிலையத்தில் இவ்வருடம் ஜனவரி மாதம் 16ம் திகதியன்று நூலகமும், கணனிப் பயிற்சி நிலையமும் திறந்து வைக்கப்பட்டதுடன், பல சிறப்பு நிகழ்வுகளும் அன்றைய தினம் அங்கு இடம்பெற்றன. நல்லை ஆதீன முதல்வர் நந்திக் கொடியை ஏற்றி நிகழ்ச்சிகளை ஆரம்பித்து வைத்தார். சைவ ஆராய்ச்சி நிலைய நூல் நிலையத்தை மாமன்றத் தலைவர் மனிதநேயர் திரு. வி. கயிலாசபிள்ளை திறந்து வைத்தார். இதனைத் தொடர்ந்து கணனிப் பயிற்சி நிலையத்தை யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் நா. சண்முகலிங்கன் திறந்து வைத்தார். இந்த நிகழ்வுகளைத் தொடர்ந்து மாமன்ற உபதலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் சிறப்பு வைபவமொன்று இடம்பெற்றது. லண்டனிலிருந்து வருகை தந்திருந்த ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலய அறங்காவலர் சபையைச் சேர்ந்த திரு. அ. தேவசகாயம் தம்பதியினர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

இந்த வைபவத்தில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் கலந்துகொண்டு ஆசியுரை வழங்கினார். யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் நா. சண்முகலிங்கன், மாமன்றத் தலைவர் மனிதநேயர் வி. கயிலாசபிள்ளை, மாமன்றப் பொதுச் செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன் ஆகியோரும் சிறப்புரையாற்றினார்கள். மாமன்ற யாழ். பணிமனை இணைப்பாளரும், கல்வி அதிகாரியுமான திரு. ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி நன்றியுரை வழங்கினார்.

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வவுனியா நலன்புரி முகாம்களில் தங்கியிருந்துவிட்டு யாழ். பல்கலைக்கழகம் திரும்பிய பட்டதாரி மாணவர்களுக்கு வாழ்க்கை நிலைப்படுத்தல் கொடுப்பனவாக நிதியுதவி வழங்கும் நிகழ்வும் இங்கு இடம்பெற்றது. லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலய அறங்காவலர் சபையினது நிதியுதவியை திரு. அ. தேவசகாயம் அவர்களும், மனிதநேய நிதியத்தின் நிதியுதவியை மாமன்றம் மற்றும் மனிதநேய நிதியத்தின் தலைவருமான மனிதநேயர் வி. கயிலாசபிள்ளை தம்பதியினரும் பட்டதாரி மாணவர்களுக்கு வழங்கினார்கள். 344 பட்டதாரி மாணவர்கள் அன்றைய தினம் நிதியுதவியைப் பெற்றுக்கொண்டார்கள்.

இந்த வைபவத்தின்போது தெய்வத்திருமகள் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களது வாழ்க்கை வரலாற்றை ஆய்வு செய்து வரும் யாழ். பல்கலைக்கழக மாணவரான செல்வன் இராஜரத்தினம் சத்தியேஸ்வரன் என்பவருக்கு மாமன்றத்தின் ஊக்குவிப்பு நிதியாக ரூபா 50000/– வழங்கப்பட்டது.

மாமன்றத்தினால் ஏற்கனவே நடத்தப்பட்டு வந்த அம்புலன்ஸ் சேவை சில வருட கால இடைவெளிக்குப் பின்னர் மீளவும் ஆரம்பித்து வைப்பது தொடர்பாகவும் அன்றைய தினம் அறிவிப்புச் செய்யப்பட்டது.

அன்றைய மாலை நிகழ்வுகளாக அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு மாமன்றத்தின் இலவச அப்பியாசப் புத்தகங்களுடன் மாமன்ற வெளியீடுகளான இந்து மக்களுக்கு ஒரு கையேடு, சிவவழிபாட்டு மலர் என்பனவும், பார்வை குறைந்தவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்பட்ட வைபவங்களும் இடம்பெற்றன.

மாமன்ற சமூக நலன் குழுத் தலைவர் விடைக்கொடிச்செல்வர் சின்னத்துரை தனபாலா அவர்களது ஏற்பாட்டில் உள்நாட்டு, வெளிநாட்டு அன்பர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட நிதியுதவியுடன் கொள்வனவு செய்யப்பட்ட வலுவிழந்தோருக்கான முச்சக்கர வண்டிகள் வழங்கும் வைபவமும் மாமன்றத்தின் அனுசரணையுடன் அன்றைய தினம் இடம்பெற்றது. அண்மைக்கால போர் நிலைமைகளினால் அங்கவீனர்களாகிய பலர் வலுவிழந்தோருக்கான முச்சக்கர வண்டிகளைப் பெற்றுக்கொண்டார்கள்.

மாமன்றத்தின் யாழ். பிராந்திய பணிமனையில் நடைபெற்ற மேற்படி சிறப்பு நிகழ்வுகளில் மாமன்றத் தலைவர் மனிதநேயர் வி. கயிலாசபிள்ளை தம்பதியினர், பொதுச் செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன் தம்பதியினர், மாமன்ற சமூக நலன் குழுத் தலைவர் விடைக்கொடிச் செல்வர் சின்னத்துரை தனபாலா தம்பதியினர், மாமன்ற உதவிச் செயலாளர் திரு. ந. கார்த்திகேயன், மாமன்ற முகாமைப் பேரவை உறுப்பினர் திரு. எஸ். சிவஞானம், திருமதி. வி. தயாபரநாதன், திரு. தே. கிரிதரன், மாமன்றத் தலைமையகப் பணியாளர்களான திரு. அ. கனகசூரியர், திரு. கோ. இளையராஜா ஆகியோர் கொழும்பிலிருந்து சென்று கலந்து கொண்டனர். செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன், மாமன்ற யாழ். பணிமனை இணைப்பாளர் திரு. ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, மாமன்ற யாழ். பணிமனை நிர்வாக அலுவலர் திரு. வி. ஜெயசிங்கம் ஆகியோர் மேற்படி சிறப்பு நிகழ்ச்சிகளுக்கான சகல ஏற்பாடுகளையும் செய்திருந்தனர்.


**மாமன்றத்தின் புதிய இணையத்தளம்**

**இந்து மாமன்ற செய்திகளுடன் பலவித தகவல்களையும்**

**வழங்கும் தகவல் மையம்**

**பாருங்கள்! உங்கள் கருத்துக்களை அனுப்பி வையுங்கள்!**

www.hinducongress.lk



## இந்து ஒளி (காலாண்டிதழ்)

இந்து சமய அறிவை மேம்படுத்தும் வகையில் அமைந்த கட்டுரைகள், கவிதைகள், ஆன்மீக புராணக் கதைகள் உட்பட பல பயனுள்ள அம்சங்களுடன் மாமன்றத்தின் காலாண்டிதழாக கடந்த பதின்மூன்று வருடங்களாக தொடர்ந்து வெளிவருகிறது.

| | | |
|---|---|---|
| *பிரதி ஒன்றின் விலை* | : | *ரூபா 30.00* |
| *வருடாந்த சந்தா* | : | *ரூபா 120.00* |
| *தபாற் செலவு (நான்கு இதழ்களுக்கு)* | : | *ரூபா 180.00* |

# வளமான நாடாக இலங்கையை முன்னெடுத்துச் செல்லவேண்டும்

## ஜனாதிபதிக்கு மாமன்றம் கடிதம்

''இந்த நாட்டின் சகல மக்களும் இன, மத வேறுபாடுகளுக்கு அப்பால் கௌரவத்துடனும், சமத்துவத்துடனும் கூடிய சமாதான வாழ்வை, தங்கள் தாய் நாட்டில் மேற்கொள்ளுவதற்கு வசதியாக வளமான நாடாக இலங்கையை முன்னெடுத்துச் செல்வதற்கு, அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானின் திருவருள் தங்களுக்குக் கிடைக்கப் பிரார்த்திக்கிறோம்.''

கடந்த ஜனவரி மாதம் 26ம் திகதியன்று நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் கௌரவ மகிந்த ராஜபக்ஷ அவர்கள் பெற்றுள்ள வெற்றியையொட்டி, வாழ்த்து தெரிவித்து மாமன்றம் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

''எங்கள் மக்கள் பல வழிகளிலும் கஷ்டப்பட்ட வேளையில் அவர்களுக்கு மனிதாபிமான சேவைகளைச் செய்வதற்கு தாங்களும், தங்கள் அரசாங்கமும் எமக்குத் தந்த சந்தர்ப்பத்திற்கும், உதவிகளுக்கும் நன்றி தெரிவிக்கும் அதேவேளையில், திருக்கேதீஸ்வர ஆலய சூழலை மேம்படுத்துவதற்காகவும், கட்டமைப்பு வசதிகளை அங்கு அமைத்துத் தருவதற்காகவும் தேவையான நடவடிக்கைகளை எடுத்தமையையும், சமூகசேவை மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் திட்டத்திற்கமைய அங்கு முதியோர்களுக்கான இல்லமொன்று அமைத்துத் தருவதையும், புனர்வாழ்வு முகாமிலிருந்து மாணவ சிறார்கள் விடுதலை செய்யப்பட்டு வருவதையும் குறிப்பாகச் சொல்லலாம்.

எங்கள் மாமன்றத்தின் துணைத் தலைவரும், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவருமான செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் கல்வி அமைச்சருக்கு விடுத்திருந்த வேண்டுகோளாக, இந்து மாமன்ற கல்விக்குழு உறுப்பினரான – யாழ். பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் எஸ். மோகனதாஸ் கௌரவ பசில் ராஜபக்ஷ அவர்களிடம் வலியுறுத்திய விடயமாக யாழ். பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடமொன்றை அமைப்பது தொடர்பாக தங்களது ''மகிந்தவின் சிந்தனை – தொலைநோக்கு'' தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருப்பதை மெச்சுகின்ற அதேவேளையில், அதனை உடனடியாக நிறுவுவதற்கான நடவடிக்கைகளை எடுக்கும்படியும் கேட்டுக் கொள்கிறோம்.

வடக்கு, கிழக்கு இளைஞர்களை கல்வித்துறையில் முன்னேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக எடுப்பதன் அவசியத்தையும் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகின்றோம். யாழ். பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக்கழகம் பட்டதாரி மாணவர்களுக்குரிய விடுதி வசதிகளும் உடனடியாகத் தேவைப்படுகிறது. இது தொடர்பாகவும் தேவையான ஏற்பாடுகளைச் செய்வதுடன், வடக்கு, கிழக்கு இளைஞர்களின் வளமான எதிர்காலத்திற்கும் ஆவன செய்வீர்கள் என நாங்கள் நம்புகின்றோம்.

அரசியல் சார்பற்ற சமய நிறுவனமான எங்கள் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் சார்பாக, தாங்கள் இந்நாட்டு மக்களுக்கு வழங்கும் சகல மனிதநேய சமூகநலத் திட்டங்களுக்கு தொடர்ந்தும் ஆதரவை வழங்கி வருவோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

## இவ்வருட மகா சிவராத்திரி விரத தினம்

**சர்வதேச இந்துமத குருபீடாதிபதி கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சார்யார் அவர்கள் விடுத்திருக்கும் செய்திக்குறிப்பு :**

விரோதி வருடம் தை மாதம் 30ம் திகதி (12.02.2010) வெள்ளிக்கிழமை 49 நா: 22 விநாடியில் பின் இரவு 2 மணி 19 நிமிடத்தின் பின்தான் கும்பத்தில் சூரியன் பிரவேசிக்கிறார். சிவராத்திரிக்கு முக்கிய காலமாகிய சதுர்த்தசி திதி நடுநிசியில் மகரத்தில்தான் சூரியன் நிற்கிறார். (மகர ரவி). எனவே தை மாதம் 30ம் திகதி (12.02.2010) வெள்ளிக்கிழமை ஸௌரமானப்படி சிவராத்திரிக்கு உகந்தது அல்ல.

மாசி மாதம் 29ம் திகதி (13.03.2010) சனிக்கிழமை 42.01 வரை த்ரயோதசி இருப்பதாலும் மஹாநிசியில் சதுர்த்தசி இருப்பதாலும் இது த்ரயோதசி மிஸ்ரமான சதுர்த்தசி சிவராத்திரிக்கு உத்தமம்.

''மாக பால்குனயோர்: மத்யே'' (காரணாகமம்) என்பதற்கு ஸௌரமானப்படி மாசி 29 மாசி, பங்குனிக்கு இடையில் வரும் சிவராத்திரியே மஹா சிவராத்திரி ஆகும். எனவே, ஆகமங்களின் கூற்றுப்படி இவ்வருடம் 13.03.2010 சனிக்கிழமை அன்றே மஹா சிவராத்திரி அனுஷ்டிப்பது உத்தமமானதாக அமைந்துள்ளது.

**அகில இலங்கை இந்து மாமன்றம்**
**ALL CEYLON HINDU CONGRESS**

**To:**

**General Secretary**
All Ceylon Hindu Congress
No. 91/5, Sir Chittampalam,
A. Gardiner Mawatha,
Colombo - 02.

Telephone: 011-2434990 Fax: 011-2344720 Email: hinducongress@gmail.com Website:www.hinducongress.lk

UNIE ARTS (PVT) LTD. TEL: 0112330195